**தலைப்பு 223 - இலங்கை கடற்படை – 2020**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கடற்படையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை கடற்படைக்கு சமர்ப்பிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை கடற்படையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.1 | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்கத்தின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் வழிகாட்டல் இலக்கம் 06 இன் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் போது, அந்த சொத்துக்களுக்குரிய பிரதான பேரேட்டு மீதிகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். அவ்வாறல்லாத மீதிகள் காணப்படுமாயின், அவை இணங்காணப்படும் வரை அந்த பெறுமதி பிரதான பேரேட்டில் திருத்தப்பட வேண்டிய மீதிகளாக வைத்திருக்க வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 1.6.3 | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 6) ரூபா 54,563,044,895 கூட்டுத்தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியானது, நிதி நிலைமைக் கூற்றினுள் ரூபா 51,777,781,170 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் அந்த பெறுமதி ரூபா 2,785,263,725 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| 2.6 | நிதிப் பிரமாணம் 381 இன் பிரகாரம், உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்காக திறைசேரியின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 74976591 ஆம் இலக்க வங்கிக் கணக்கு விவசாய வருவாய்களை சேமிப்பதற்காக திறக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருந்தது. | வங்கிக் கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்காக திறைசேரியின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்

நிதிக்கூற்றுக்களில் உரிய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் திறைசேரி கட்டுநிதி பெறுமதி ரூபா 49,062,520,336 என காண்பிக்கப்பட்டிருந்த போதும் திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் கணக்கிடப்பட்ட திறைசேரி கட்டுநிதி பெறுமதி ரூபா 49,085,085,447 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 22,565,111 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரி அச்சுப்பிரதிகள் (BTBL-72/SA70) இன் பிரகாரம் மொத்தக் கட்டுநிதி பெறுவனவு ரூபா 52,425,888,028 ஆக இருந்ததுடன், அதன் பிரகாரம் திறைசேரி அச்சீட்டுக் குறிப்பு மற்றும் ஒப்பிட்டுக்கு இடையே 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் 2020 தயாரிப்பதற்கு உரிய வழிகாட்டிகள் மற்றும் மாதிரி | நிதிக்கூற்றுக்களில் எண்ணிக்கை ரீதியான பெறுமதிகள் திறைசேரி இறுதிக் கணக்கு மீதிகளின் பிரகாரம் சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | படிவத்தின் 3.6 பந்தியின் பிரகாரம் நிதிச்செயலாற்றல் கூற்றினை தயாரிக்கும் போது ACA -3 மாதிரி பயன்படுத்தப்பட்டிருந்தது. | |
| (ii) | நிதிச்செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 3,576,138,919 ஆக இருந்த போதும் திறைசேரி அச்சுக் பிரதிகள் மற்றும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 3,578,917,963 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,779,044 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகளின் பெறுமதி சரியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii) | நிதிச்செயலாற்றல் கூற்றின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி மீதி பெறுமதி ரூபா (1,622,430,952) என காண்பிக்கப்பட்டிருந்த போதும் மேற்படி (அ) மற்றும் (ஆ) இல் தாக்கத்தின் பேரில் கட்டுநிதி மீதி ரூபா (1,597,086,796) ஆக இருக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி ரூபா 25,344,156 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது எசீஏ 1 முதல் ஏசீஏ 06 வரையான மாதிரிகளில் உள்ள தகவல்களை பயன்படுத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் வருமானம் மற்றும் செலவின சீராக்கத்தின் பின்னர் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி ரூபா 1,622,430,952 ஆன வேறுபாடு காணப்படவில்லை. | - மேற்படி - |

## (ஆ) மூலதனச் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாத மூலதனச் செலவின விடயமான 223-1-1-0-2101 உடைய வாகன கையேற்பதற்காக ரூபா 27,216 ஆன பொறுப்பொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. | 2020 பொறுப்பு கூற்று தயாரிப்பதற்காக தரவுகளை கணனியில் உள்ளிடும் போது இடம்பெற்ற தவறு காரணமாக தவறான செலவின விடயமொன்றின் கீழ் பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. | சரியான செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## (இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண 'பீ' கணக்கின் கீழ் குறிப்பு மூலம் பெறுகை பெறுமானமாக ரூபா 6,180,487 தொகை திறைசேரியின் கணனி அச்சிடல் குறிப்பு மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 5,059,063 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கட்டுநிதி சீராக்க கணக்கில் சீராக்க வேண்டிய பெறுமதி ரூபா 1,121,424 ஆக இருந்த போதும் சீராக்கப்பட்ட பெறுமதி ரூபா 2,243,479 ஆக இருந்த காரணத்தினால் ரூபா 1,122,055 தொகை கூடுதலாக முற்பண ''பீ'' கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | கட்டுநிதி சீராக்க கணக்கில் முற்பண பீ கணக்கில் பெறுவவு பெறுமதி திறைசேரி கணனி அச்சுக் குறிப்பில் SA-51/BTBL 67 அட்டவணையின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. | கட்டுநிதி சீராக்க கணக்கு சரியாக இணக்கம் செய்யப்பட வேண்டு |

**(ஈ) வைப்புக் கொடுப்பனவு மற்றும் மீதிகள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி 570 இன் பிரகாரம் காலங் கடந்த வைப்பாக குறிப்பிடப்பட்டுள்ள வைப்புக்கள் நி.பி 571 இன் பிரகாரம் தீர்வு செய்வதற்காக ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நி.பி 571(2) இன் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 16/35 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் ரூபா 3,031,923 தொகை 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 16/35 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கு மற்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட காலாவதியான வைப்புப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு நி.பி 571(2) இன் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முன்னர் அதற்காக தேவையான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இறுதி கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட வைப்புக்களை தீர்வுசெய்வதற்கும் ஏனைய வைப்புக்களை அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**(உ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி கணணி அச்சுப் பிரதியின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகளின் பெறுமதி ரூபா 54,563,044,895 ஆக இருந்தது. அத் திகதியில் கணக்கீட்டு புத்தகங்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 51,777,781,170 ஆக இருந்தது. வேறுபாட்டிற்கு காரணமாக ACA – 06 படிவத்தில் ரூபா 2,785,263,725 ஆன காணியின் பெறுமதி உள்ளடக்கப்பட்ட பக்கத்தின் கூட்டுத்தொகை தவறுதலாக | முன்னைய ஆண்டின் போது இறுதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கு இடையே வேறுபாடு முன்னைய ஆண்டில் பொருட் பதிவேட்டில் உட்படுத்தப்படாத கொள்வனவு இந்த ஆண்டின் ஆரம்ப மீதியாக பதிவுசெய்வதற்கு நேர்ந்தமை காரணமாகும். | முன்னய ஆண்டின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கு இடையே வேறுபாடொன்று இருந்தால் அதனை குறிப்பாக சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்படவில்லை என 2019 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வின் அவதானிப்புகளிற்கு வழங்கப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு ACA – 06 படிவத்தில் சரியாக்கப்பட்டிருந்தால் 2020 ஆம் ஆண்டின் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப ஆரம்ப மீதியாக எடுக்க வேண்டிய பெறுமதி ரூபா 54,563,044,895 ஆக இருந்த போதும் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரியில் ஆரம்ப மீதியாக ரூபா 52,169,029,884 காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2020 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 ஆம் இலக்கத்தின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குரிய வழிகாட்டி இலக்கம் 06 இன் 4.2 பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ள அனைத்து படிவங்களிலும் பிரதான நிதி உத்தியோகத்தர் அல்லது பிரதான கணக்காளரால் தமது கையொப்பம் இடப்பட வேண்டிய போதிலும் ACA – 06 படிவத்தில் 2020 ஆம் ஆண்டின் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் பிரதான நிதி உத்தியோகத்தர் அல்லது பிரதான கணக்காளர் தமது கையொப்பத்தை இட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இத்தவறுகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஊ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திறைசேரியின் இறுதி கட்டுநிதி பொழிப்பு (SA – 70) இன் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு பெறுமதி ரூபா 52,425,888,028 ஆக இருந்த போதும் (ACA – 3) மாதிரியின் பிரகாரம் ரூபா 52,339,421,818 தொகையே காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டுநிதி | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதியான ரூபா 26,466,210 தொகை 2020 ஆம் ஆண்டு தீர்வு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் 2020 இல் ஏசீஏ படிவத்தில் குறிப்பிடப்பட்ட கட்டுநிதிக் கணக்கில் 2020 சனவரி 01 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதியாக ரூபா 26,466,210 தொகை பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி மற்றும் கட்டுநிதி கணக்கின் பெறுவனவுகளின் கீழ் உள்ள ரூபா | எண்ணிக்கை ரீதியான பெறுமதிகள் திறைசேரி இறுதி கணக்கு மீதிகளின் பிரகாரம் சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவு ரூபா 26,466,210 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 52,399,421,818 தொகையின் மொத்தமான ரூபா 52,425,888,028 ஆன பெறுமதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மொத்த பெறுவனவாகும். | |
| (ii) | மீளாய்வாண்டின் திறைசேரியின் இறுதி பரீட்சை மீதியில் (7002/29/20) ஏனைய மூலாதாரங்கள் மூலம் கட்டுநிதி பெறுவனவு பெறுமதி ரூபா 3,340,802,581 ஆக இருந்த போதும் (ACA - 3) படிவத்தில் காண்பிக்கப்பட் பெறுமதி ரூபா 3,336,901,482 ஆக இருந்தது. ஏனைய மூலாதாரங்கள் மூலம் கட்டுநிதி பெறுவனவு பெறுமதி ரூபா 3,901,099 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி கட்டநிதி பெறுவனவு BT BI 72/ SA திறைசேரி பெறுவனவு குறிப்புகளுக்கு சமமாகும். திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாாரம் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii) | மேற்படி (7.1) மற்றும் (7.2) சீராக்கத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் கிடைத்த கட்டுநிதி பெறுமதி ரூபா 49,085,085,447 ஆக இருந்தது. எனினும் (ACA - 3) படிவத்தில் திறைசேரி யிடமிருந்து கிடைத்த கட்டுநிதியின் பெறுமதி ரூபா 49,062,520,336 தொகையே காண்பிக்கப்பட்டிருந்தது. திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் கிடைத்த கட்டுநிதி பெறுமதி ரூபா 49,059,929,127 ஆக இருந்தது. அதன் பிரகாரம் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**(ஈ) கட்டுநிதி சீராக்கக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குரிய வழிகாட்டிகள் மற்றும் மாதிரி படிவத்தின் 07(iv) பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதி வரை திறைசேரிக்கு தீர்வுசெய்ய வேண்டிய அல்லது திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி மற்றும் காசேட்டின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்வுசெய்ய வேண்டிய பெறுமதி கண்டிப்பாக வேறொரு பெறுமதியை எடுப்பதால் அம்மீதிகளை சீராக்குவதற்காக கட்டுநிதி சீராக்கக் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதும் கட்டுநிதி கணக்கிற்கு மேலதிகமாக மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிடாத அட்டுறு கட்டுநிதி கணக்கொன்றும் தயாரிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி சீராக்கக் கணக்கொன்று தயாரிப்பதற்கு எதிர்வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஊ) காசுப்பாய்ச்சல் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய காசுப் பாய்ச்சலை கருத்திற் கொள்ளும் போது வருமானமல்லாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 3,336,901,482 என கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய காசுப் பாய்ச்சலின் கீழ் வருமானமல்லாத பெறுவனவுகளாக பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 3,336,901,482 ஆன பெறுமதி காசாக கிடைத்த வருமானமாக இருந்ததால் வருமானமல்லாத பெறுவனவுகளில் வேறுபாடொன்று | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குரிய வழிகாட்டிகள் மற்றும் மாதிரி படிவத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று |

| | | | |
|---|---|---|---|
| | 3,708,917,963 ஆக இருந்தமையால் ரூபா 372,016,481 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | காணப்படவில்லை. | அண்ணளவான அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப் பாய்ச்சலை கருத்திற் கொள்ளும் போது கட்டுநிதி பெறுவனவு ரூபா 49,062,520,336 என காண்பிக்கப்பட்டிருந்த போதும் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 49,059,929,127 ஆக இருந்தது. திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் கணக்கிடப்பட்ட கட்டுநிதி பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 49,085,085,447 ஆக இருக்க வேண்டிய போதும் அப்பெறுமதி ரூபா 22,565,111 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரி கணனி அச்சீட்டு பிரதியின் பிரகாரம் மொத்த கட்டுநிதி பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 52,425,888,028 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் கட்டுநிதிக் கணக்கின் பிரகாரம் திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி பெறுமதி ரூபா 49,062,520,336 ஆகும். 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் 2020 தயாரிப்பதற்குரிய வழிகாட்டிகள் மற்றும் மாதிரி படிவங்களின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ஏசீஏ 3 மாதிரி பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் எண்ணிக்கை ரீதியான பெறுமதிகள் திறைசேரி இறுதிக் கணக்கு மீதிகளின் பிரகாரம் சீராக்கப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சலை கணக்கிடும் போது தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 52,380,071,862 என குறிப்பிடப்பட்டிருந்த போதும் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 49,755,898,509 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,624,173,353 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களைப் பதிவு செய்யும் போது ரூபா 2,624,173,353 தொகையான மானியங்கள் மற்றும் மாற்றல்களின் பெறுமதி மற்றும் ஏனைய செலவின தலைப்புகளுக்காக செலவிடப்பட்ட செலவினங்களும் தவறுதலாக உள்ளடக்கப்பட்டுள்ளதால் ஆகும். காசுப் பாய்ச்சல் கூற்றில் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் சகல செலவினங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் செலவினங்களை வெவ்வேறாக பதிவு செய்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | செயற்பாட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட தொகையை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப் பாய்ச்சலை | காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப் பாய்ச்சலை கணக்கிடும் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிடும் போது மானியங்கள் மற்றும் மாற்றல்கள் பெறுமதி மற்றும் செலவினத் தலைப்பிற்காக செலவிடப்பட்ட செலவினம் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதும் குறித்த பெறுமதி கருத்திற் கொள்ளப்படாமல் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய காசுப் பெறுமதி கணக்கிடப்பட்டிருந்தது | போது மானியங்கள் மற்றும் மாற்றல்கள் பெறுமதி மற்றும் ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக செலவிடப்பட்ட செலவினங்களின் பெறுமதி தவறுதலாக தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | |
| (v) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்குரிய வழிகாட்டிகள் மற்றும் படிவங்களின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படும் அட்டவணைகளில் உள்ளடக்கப் பட்ட எண்ணிக்கைகளை அடிப்படையாக கொண்டு ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதும் முற்பணங்களை அறவிடல், பௌதீக சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் முற்பண கொடுப்பனவிலான காசுப் பாய்ச்சல் முதலீட்டு செயற்பாடுகளின் கீழும் வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவு பெறுமானங்களினால் உருவான காசுப் பாய்சச்ல் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் தயாரிக்கும் போது மேற்படி முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று அனைத்து செலவினங்களும் கூட்டப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளை வெவ்வேறாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

2. **நிதி மீளாய்வு**

2.1 **செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) பிரிவின் பிரகாரம் வேலையொன்று அல்லது சேவையொன்று அல்லது வழங்கலொன்று என்பவற்றிற்காக செலவின பொறுப்பு மற்றும் செலவின அளவு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நிதியாண்டிற்கான நிதி ஏற்பாட்டினை மிகைக்க கூடாது. அத்துடன் உள்ளவாறாக செலுத்த வேண்டிய கால அளவில் தேவைப்படுமாயின் தேவையான அதிகாரத்தை அதாவது மேலதிக நிதி ஏற்பாடு கிடைக்கும் என்ற ரீதியில் செலவினம் அல்லது பொறுப்புக்கள் அல்லது செலவிடக்கூடாத போதும் மீளாய்வாண்டின் போது 03 செலவின விடயங்கள் தொடர்பாக தேறிய ஏற்பாடு ரூபா 292,739,546 தொகையை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் நிதி ஏற்பாடு மிகைத்தல் 101 சதவீதமாக இருந்தது. | கொவிட் 19 தொற்று நிலைமை பரவுவதை தவிர்த்து கடற்படை செயற்பாட்டு கடமைகளை முறையாக நடாத்தி செல்வதற்காக எதிர்பார்த்த மட்டத்தினை விட அத்தியவசிய செலவினத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்வதன் பேரில் செலவின விடயங்களில் தேறிய நிதி ஏற்பாட்டை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதும் செலவின விடயங்களில் நிதி ஏற்பாட்டினை மிகைத்து செலவினம் செய்யப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடான ரூபா 600,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் பாடநெறிகளையும் இரத்துச் செய்ய நேர்ந்தமையால் நலன்புரி நிகழ்ச்சிகள் மற்றும் அரச மொழிக் கொள்கையை | நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்படுத்துவதன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாட்டினை பயன்படுத்த முடியாமல் போனது. | |
| (இ) | மீண்டெழும் செலவின விடயமான 223-1-1-0-1404 குததகை வாடகை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வரிக் கொடுப்பனவிற்கான தேறிய ஏற்பாடான ரூபா 10,796,000 தொகையில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 4,429,630 அல்லது 41 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாக நிறுவனங்களில் சேவைக்கு வருகை தரும் நபர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை, நிறுவனங்களை மூடி விடப்பட்டிருந்தமை மற்றும் தனிமை நிலைமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை என்பவற்றால் ஏற்பட்ட தாமதம் காரணமாக அறவிடப்பட வேண்டிய வரி, குத்தகை வாடகை என்பவற்றை தீர்வு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு அளவு செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டது. | பெற்றுக்கொண்ட நிதி ஏற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேறகொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (குறிப்பு (iii)) பரிசோதனையின் போது இலங்கை கடற்படைக்குரிய அல்லாத 09 செலவின விடயங்களுக்காக ரூபா 609,724 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | தரவு கணனி மயப்படுத்தும் போது ஏற்பட்ட தாமதம் காரணமாக தவறான செலவின விடயத்தின் கீழ் உரிய பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. | சரியான பொறுப்புக்களுக்கு உட்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு (iii)) ஆண்டிற்குரிய பொறுப்புக்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட வேண்டிய போதும் உரிய கூற்றில் மீளாய்வாண்டிற்குரிய அல்லாத 308 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 66,636,350 ஆன பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டிற்குரியதல்லாத சந்தர்ப்பங்கள் அச்சுப் பிழை காரணமாக பதிவு செய்யப்பட்டுள்ளது கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட சகல கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2020 ஆம் ஆண்டிற்குரியது என அறிய தருகின்றேன். | ஆண்டிற்குரிய பொறுப்புக்கள் மாத்திரம் குறிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 94(1) பிரிவின் பிரகாரம் உள்ளவாறாக செலுத்த வேண்டிய கால அளவில் தேவையான அதிகாரம் இல்லாமல் மேலதிக நிதிஏற்பாடு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் செலவினங்கள் அல்லது பொறுப்புக்களுக்கு உட்படக்கூடாததுடன், நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் நிதி உள்ளதாகவும் அன்றாடம் பட்டியல் கிடைப்பதாகவும் அப்பட்டியல் தாமதமின்றி தீர்வு செய்யப்படுவதாகவும் உறுதிப்படுத்தும் பொருட்டு அதிகாரமளிக்கும் உத்தியோகத்தர் உட்பட சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்களாலும் பொறுப்பு தொடர்பான பதிவேட்டினை தினந்தோறும் பரீட்சித்து பார்க்க வேண்டியதுடன் நிதியாண்டின் இறுதி சந்தர்ப்பத்திலேயே ஒரே தடவையில் பாரியளவு தொகையொன்று கொடுப்பனவு செய்து தீர்வு செய்வதற்காக பட்டியல்களைச் சேர்த்து வைக்க கூடாது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,122,379,832 ஆக | பட்டியல்களைத் தீர்வுசெய்யும் போது 01-02 மாதங்களுக்கு இடைப்பட்ட தாமதங்கள் இடம்பெற்றிருந்தது. எவ்வாறாயினும் திறைசேரியிடமிருந்து பணம் கிடைத்த உடனே பட்டியல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

இருந்ததுடன் அப்பெறுமதியில் மீளாய்வாண்டிற்குரியதல்லாத 1,520 பொறுப்பு உருப்படிகள் இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 227,525,925 ஆக இருந்தது.

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை கடற் படையால் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்துப் பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதனை ஆக்கபூர்வமாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் ஆயினும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் | | | |
| 16(2) ஆம் பிரிவு | வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வரைவு செயலாற்றல் அறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய வரைவு செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கையை உரிய ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டிருந்தமை, செயலாற்றல் அறிக்கைய தயாரிப்பதற்காக உரிய ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தமை மற்றும் உரிய ஆண்டிற்காக வழங்கப்பட்ட கணக்காய்வாளரர் தலைமை அதிபதி பொழிப்பறிக்கை மீளாய்வு செய்யப்பட்டு அதில் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதால் அவதானிப்புடன் இணங்குகின்றேன். | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 1950 இன் திசெம்பர் ஆந் திகதிய 34 ஆம் இலக்க கடற் படைச் சட்டம் | | | |
| | இலங்கை கடற்படையால் பேணிச் செல்லப்படும் விவசாய நிதியத்திற்காக கிடைக்கும் வருமானம் முழுவதும் நிதியத்திற்கு | கடற்படை விவசாய செயற்திட்ட நிதியம் தவிர ஏனைய நிதியம் அங்கத்தவர்களின் அங்கத்தவர் தொகை ஈடுபடுத்தி | கிடைக்கும் வருமானத்தில் ஒரு தொகை அரச இறையாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் வருமானத்தின் எந்தவொரு அளவும் அரச இறையாக கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாபிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டும். |
| (iii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>----------------------------------- | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | - மேற்படி - | |
| | நிதிப் பிரமாணம் 371 | கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லையான ரூபா 100,000 ஐ மிகைத்து வட மத்திய கடற்படை கட்டளையினால் எழுத்துமூல அதிகாரம் இல்லாமல் செயல்நிமித்த கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | சில்லறை கட்டுநிதியை தீர்வு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதிக்காக மாத்திரம் பணத்தை பெற்றுக கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து உள்ளகக் கட்டுப்பாட்டை பலப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| | நிதிப் பிரமாணம் 372 | கட்டுநிதி மற்றும் செயல் நிமித்த கட்டுநிதி எப்போதும் பரீட்சித்து பார்க்க வேண்டிய போதும் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவைக்கு குறையாமல் திணைக்களத் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் வட மத்திய கடற்படை கட்டளையினால் அவ்வாறான பரிசோதனையொன்று இடம்பெற்றிருக்கிவல்லை. | குறித்த பரிசோதனையை மேற்கொள்வதற்கு அலுவலகத்திலுள்ள சிரேஷ்ட கடற்படை வீரருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளகக் கட்டுப்பாட்டை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

## 2.5 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 7041345 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்குரிய 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை. | 7041345 ஆம் இலக்க வங்கிக் கணக்கின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டது. | குறித்த காலப் பகுதியில் வங்கி இணக்கக் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் ரூபா 2,066,425 பெறுமதியான 60 காசோலைகள் 06 மாதங்களை மிகைத்து இருந்தன. அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்களை மிகைத்த காசோலை களிலிருந்து ரூபா 911,178 பெறுமதியான 33 காசோலைகள் 2021 மார்ச் 08 ஆந் திகதி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 72,642 பெறுமதியான 6 காசோலைகள் காலம் நீடிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய காசோலைகள் நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) இனங்காணப்படாத ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலாவதியான வைப்புக்கள் மற்றும் தீர்வையாகாத காசோலைகளின் பெறுமதி முறையே ரூபா 52,626,293 மற்றும் ரூபா 25,893,066 ஆக இருந்தது. | இனங்காணப்படாத ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலாவதியான வைப்புக்களில் ரூபா 3,937,610 ஆன தொகை 2021 சனவரி 01 ஆந் திகதி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். | இனங்காணப்படாத வைப்புக்களை விரைவில் இனங்கண்டு அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இனங்காணப்படாத ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலாவதியான கொடுப்பனவு பெறுமதி ரூபா 4,938,922 ஆக இருந்தது. | இனங்காணப்படாத ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலா வதியான கொடுப்பனவுகளில் ரூபா 332,918 தொகை தீர்வு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய கொடுப்பனவுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இனங்காணப்படாத கொடுப்பனவுகளை விரைவில் இனங்கண்டு அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 பெறுகைகள்

-------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 பந்தியின் பிரகாரம், பெறுகை செயற்பாட்டின் ஆரம்ப சந்தர்ப்பத்திலிருந்து அதற்குரிய கேள்விதாரரை தெரிவுசெய்யும் வரையான காலப்பகுதி தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் கிழக்கு கடற்படை கட்டளையினால் ரூபா 3,216,073 பெறுமதியான 11 அலுமினியம் பார் உருப்படிகள் கொள்வனவின் போது அதற்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.3.1 இன் பிரகாரம், நியம கேள்வி கோரல் பதிவேடு பயன்படுத்தப்பட வேண்டியதுடன் ஒப்பீட்டு விலை முறைமையில் கொள்வனவு செய்யும் போது NPA/SBD/GOODS/01 என்ற நியம கேள்வி கோரும் பதிவேடு பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இலங்கை கடற்படையின் மூலம் சகல கடற்படை கட்டளைகளிலும் சந்தை ஒப்பீட்டு முறைமைக்காக கேள்வி 3.4 நிய கோரல் பதிவேடு இப்பெறுகைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (இ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 இன் பிரகாரம், சந்தை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கூறுவிலை கோருவதற்காக குறைந்தது 07 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், கிழக்கு கடற்படை கட்டளையினால் அலுமினியம் பார் உருப்படிகள் கொள்வனவின் போது அதற்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கேள்வி கோருவதற்காக குறைந்தது 07 நாட்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அக்காலப்பகுதியில் நிலவி உலகலாவிய கொவிட் 19 தொற்று காரணமாக அரசினால் விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டதத்தினால் வழங்குனர்களுக்கு முன்னர் குறிப்பிட்ட காலப்பகுதியில் கேள்வியை சமர்ப்பிக்க முடியாத நிலைமையொன்று இருந்ததால் கேள்வியை பெற்றுக்கொள்ளும் நிச்சயமற்ற நிலைமை காரணமாக இவ்வாறு இடம்பெற்றது. | - மேற்படி - |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கடற்படையின் ஒவ்வொரு கட்டளை பிரிவுகளிலும் படகுகள் / கப்பல்கள் 13 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலைமையில் காணப்பட்ட போதும் அப்படகுகள்/ கப்பல்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கிழக்கு கடற்படை கட்டளை பிரிவிற்குரிய செயற்பாட்டில் இல்லாத அல்லது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகுகள் / கப்பல்கள் 09 ஆக இருந்ததுடன் அதில் ஒரு படகு தற்போது செயற்பாட்டு நிலைமையில் காணப்படுகின்றது. | கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) வெலிசர மத்திய சீருடை களஞ்சியத்தினுள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விநியோகிக்கப்படாமல் காணப்படும் ரூபா 769,409 பெறுமதியான காலணிகள் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு கட்டளை இடாமை காரணமாக இதுவரை கொள்வனவு செய்யப்பட்ட காலணிகள் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலைமையில் இருந்தன. | கடற் படை உள்ளக கணக்காய்வின் மூலம் மத்திய சீருடை களஞ்சியத்தில் 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் நீண்டகாலமாக விநியோகிக்கப்படாமல் காணப்படும் விடயங்களின் மொத்த பெறுமதி ரூபா 3,311,388 ஆக இருந்த போதும் 2021 ஏப்ரல் 16 இல் அப்பெறுமதி ரூபா 769,409 ஆக இருந்தது. | பொருட்கள் கொள்வனவின் போது தேவைப்பாடு தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை கடற்படையினால் பயன் படுத்தப்படுகின்ற வேறு அமைச்சுக்கள் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு 437.2877 ஹெக்டேயராக இருந்ததுடன் அக்காணிகளைப் பயன்படுத்து வதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சில காணிகள் 08, 14 மற்றும் 22 ஆண்டு காலத்தை விஞ்சி பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ள தகவல்களுடன் இணங்குவதுடன் குறித்த காணித்துண்டுகளை கையேற்பதற்காக அந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. | முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள விரைவில் மேற்கொள்ள வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு கடற்படை கட்டளைகளினால் தேவைப்பாட்டின் பிரகாரம் கட்டளை இடப்பட்ட ரூபா 52,454,510 ஆன 214 உருப்படிகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை / கட்டளை என்பவற்றின் பிரகாரம் சில பொருட்கள் / பகுதிகள் வழங்கப்படாதிருந்த தாமத காலம் 03 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்டன. | கடிதங்ககள் மூலம் வழங்குனர் தெரியப்படுத்தப் பட்டிருந்ததுடன் தாக்கமளித்துள்ள கொரோனா தொற்றுநோய் காரணமாக, பொருள் விலைகள் அதிகரித்தமை, இறக்குமதியில் ஏற்பட்ட தாமதம் உற்பத்தி செயற்பாடுகள் இடை நிறுத்தம், சந்தையில் உள்ள பொருட்களின் பற்றாக்குறை காரணமாக, அதற்காக இதே போன்ற வேறு மாற்றீடுகள் வழங்க நேர்ந்தமை போன்றவை காரணமாக கட்டளை இரத்து செய்வதற்கு அல்லது எதிர்கால கொள்வனவிற்காக நடவடிக்கை எடுத்தமையால் மீளாய்வாண்டின் கொள்வனவுகளை பூர்த்தி செய்வதற்கு தாமதமானது. | உடன்படிக்கை / கட்டளையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யாத தாமத காலம் 06 மாதங்களை விஞ்சிய 58 வாகனங்கள் | மீளாய்வாண்டில் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாத தாமத காலம் 06 மாதங்களுக்கு மேற்பட்ட 58 வாகனங்களில் 16 | விரைவில் தேவையான திருத்த வேலைகளை |

| | | | |
|---|---|---|---|
| | வடக்கு, கிழக்கு தெற்கு மற்றும் வடமத்திய கடற்படை கட்டளைகளில் காணப்பட்டன. | வாகனங்கள் கிழக்கு கட்டளை பிரிவிற்கு உரியதாக இருந்ததுடன் அதில் 05 வாகனங்கள் தற்போது செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் 04 வாகனங்கள் இம்மாதம் முடிவடைவதற்கு முன்னர் செயற்பாட்டு நிலைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. | பூர்த்தி செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யாத தாமத காலம் 06 மாதங்களைக் கடந்த 65 இயந்திரங்கள் வடக்கு, வட மத்திய மற்றும் தெற்கு கடற்படை கட்டளை பிரிவுகளில் இருந்தன. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - |
| (ஈ) | இனங்காணப்பட்டுள்ள ரூபா 2,429,219 பெறுமதியான பழுதுபார்க்க முடியாத நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் உள்ள உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் என்பன வடமேல், கிழக்கு, தெற்கு தென் கிழக்கு மற்றும் கடற்படை வைத்தியசாலை ஆகிய கட்டளை பிரிவுகளில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | கிழக்கு கட்டளை பிரிவிற்குரிய பழுதுபார்க்க முடியாத நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் உள்ள உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலைமையில் உள்ள உபகரணங்களை துரிதமாக கைதவிர்ப்புச் செய்ய வேண்டும் |
| (உ) | வட மத்திய, தெற்கு வடமேல், கிழக்கு, தென் கிழக்கு ஆகிய கட்டளை பிரிவுகளால் வெளி நிறுவனங்களுக்கு திருத்த வேலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை மீள வழங்க வேண்டிய ரூபா 44,161,710 பெறுமதி 80 சொத்துக்கள் இதுவரை திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | கிழக்கு கட்டளை பிரிவிற்குரிய 72 விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அவ்விடயங்களின் 18 கோவைகள் பூர்த்தி செய்யப்பட்டு 13 இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் கட்டளை அதிகாரி வழங்கல் மற்றும் சேவைகளில் குறிப்பிடப்பட்ட 04 விடயங்கள் மற்றும் 02 விடயங்கள் இரண்டு தடவை பதிவு செய்யப்பட்டதன் பேரில் முறையே ரூபா 3,709,400 மற்றும் ரூபா 1,376,200 என கணக்காய்வுப் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பெறுமதியில் கழித்துக் காண்பிக்கப்பட வேண்டும். | உடன்படிக்கை / கட்டளையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இனங்காணப்பட்டுள்ள இயங்காத அல்லது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலைமையில் உள்ள 18 கப்பல்கள் / படகுகள் வடக்கு, வடமேல் கிழக்கு கட்டளை பிரிவுகளில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | கிழக்கு கட்டளை பிரிவிற்குரிய இயங்காத அல்லது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலைமையில் உள்ள 09 கப்பல்கள் / படகுகள் ஆக இருந்ததுடன், அதில் ஒரு கப்பல் தற்போது செயற்பாட்டு நிலைமையில் உள்ளது. | நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலைமையில் உள்ள கப்பல்களை துரிதமாக கைதவிர்ப்புச் செய்ய வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதி வரை திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மீள வழங்க வேண்டிய மேற்கு கடற்படை கட்டளை பிரிவிற்கு சொந்தமான 46 வாகனங்களின் உரிய திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. | கட்டளை பிரிவு மோட்டார் வாகன பொறியியலாளர் திணைக்களம் (மே) மூலம் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் தவறான அல்லது இனங்க முடியாத அல்லது பிரசித்தப்படுத்தல் மூலம் பொது மக்கள் நலன்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் எனக் கருதக்கூடிய எந்தவொரு விடயமும் காணப்படவில்லை. | உடன்படிக்கை / கட்டளையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிவில் பதவியணியில் ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டத்தில் 428 பதவிகள் அதாவது 28 சதவீதம் வெற்றிடங்களாக இருந்தன. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | வெற்றிடங்களாக உள்ள பதவிகளை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கடற்படையில் நிரந்தர மற்றும் தன்னார்வ கடற்படை உத்தியோகத்தர் பதவியணியில் 9,075 அதாவது 7 சதவீதம் வெற்றிடங்களாக இருந்ததுடன் 1221 நிரந்தர மற்றும் தன்னார்வ படையினர் அதாவது 20 சதவீதம் வெற்றிடங்களாக இருந்தன. | 2021 முதல் 2023 வரை, கடற்படையில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படையினருக்கு பயிற்சி அளிப்பதற்கு உள்ள இடவசதிகளின் பிரகாரம் 03 ஆண்டு திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளதுடன் அதன் மூலம் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களில் 100.1 சதவீதம் மற்றும் கடற்படையினரின் வெற்றிடங்களில் 95.67 சதவீதம் 2023 திசெம்பர் 31 இற்குள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விசேட முறைமையின் கீழ் கடற்படை பதவியணியினர் 4564 அதாவது 230 சதவீத மிகையொன்று இருந்தது. | விசேட முறைமையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 4564 ஆன கடற்படையினர் மிகையாக இருந்த போதும் அனுமதிக்கப்பட்ட 53000 மொத்த கடற்படையினரின் கீழ் பேணிச்செல்லப்படுகின்றன. | மிகையான கடற்படையினரை அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முறையான தகைமை பெற்ற உத்தியோகத்தர்களுக்காக பதவி உயர்வு வழங்கும் செயற்பாட்டை விரைவுபடுத்தல் ஊடாக பதவி உயர்வுக்கு தாமதமாக உள்ள உத்தியோகத்தர்களுக்கு உரிய காலப்பகுதியில் பதவி உயர்வு வழங்குவதன் மூலம் உயர் செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு முடியுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்ட படி தகைமை பெற்றுள்ள கடற் படையினருக்காக பதவி உயர்வு வழங்குவதை துரிதப் படுத்துவதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிர்ணயிக்கப்பட்ட வகையில் பதவி உயர்வு வழங்கும் நடைமுறையை துரிதப்படுத்த வேண்டும். |